DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: பெருமாள் | Father's Name: கந்தசாமி |
| Village: பள்ளவள்ளி | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age:59 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 18.10.2022.

**O.S. 88/2020 - பி.வா.சா.2**

<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –</u>

01) இந்த வழக்கின் 4ம்பிரதிவாதி சண்முகத்தின் மகன் தான் 3ம் பிரதிவாதி திருமுருகன் என்றால் சரிதான். திருமுருகன் ஓமன் நாட்டில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் எனக்கு அவரை பற்றிய விவரம் தெரியாது. என் அண்ணன் மணி மூலம் கிரயம் பெற்ற 2 ஏக்கர் 66 செண்ட் சொத்தில் தற்போது சண்முகம் தான் பருவகால பயிர்கள் செய்து வருகிறார் என்று சொன்னால் அதுபோன்று அவர் பயிர் செய்து வரவில்லை. அவ்வாறு சண்முகம் பயிர் செய்து வருவதால் அது குறித்து விஏஓ சான்று வழங்கியிருக்கிறார் என்று சொன்னால் எனக்கு சான்று பற்றி தெரியாது சண்முகம் அதுபோன்று பயிர் செய்யவில்லை.

02) சண்முகம் 2 ஏக்கர் 66 செண்ட் சொத்தில் பயிர் செய்து வருவதை நான் 08.08.2020 அன்று தடை செய்ததால் என் மீது சண்முகம் குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் புகார் அளித்தது உண்மை தான் ஆனால் அது போன்று சண்முகம் பயிர் செய்து வரவில்லை அவர் தான் கூலிப்படை மூலம் இடையூறு செய்து புகார் அளித்தார் நானும் பதிலுக்கு புகார் அளித்தேன். காவல்நிலையத்தில் சண்முகம் கிரைய ஆவணங்களை காண்பித்தார் என்றாலும், என் வசம் கிரைய ஆவணங்கள் எதுவும் இல்லாததால் போலீசார் சிவில் பிரச்சனையை நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ளுமாறு சொல்லி அனுப்பினார்கள் என்றால் காவல் நிலையத்தில் பிரச்சனை பேசப்பட்டது நான் கூலிப்படைக்கு பயந்து நீதிமன்றத்திற்கு வந்துவிட்டேன்.

03) என் அண்ணன் மூலம் கிரையம் கொடுக்கப்பட்ட 2 ஏக்கர் 66 செண்ட் சொத்து போக மீதமுள்ள 2 ஏக்கர் 66 செண்ட் சொத்தினை நான் எனது மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் எழுதப்பட்ட தேதி 16.09.2013 என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நானும், என் மனைவியும் 25.11.2013 அன்று நிர்மலா என்பவர் பெயருக்கு கிரைய ஒப்பந்தம் எழுதி பதிவு செய்தோம் என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எனது மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த பிறகு அதே சொத்து சம்மந்தமாக இந்த வழக்கினை தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

04) எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 18.03.2020 அன்று குரிசிலாப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அடமான கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் நகையை வைத்து விவசாய கடன் தான் வாங்கினேன். அந்த கடனுக்கு பத்திரம் எழுதி பதிவு செய்தோமா என்றால் பத்திர எழுதி பதிவு செய்யவில்லை. நான் அதேபோல 18.03.2020 அன்றே மேலும் ஒரு கடன் ரூ.1,74,000/– பெற்றதாக சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம் சொல்லியிருக்கிறேன் அதுவும் விவசாய கடன் தான். நான் வழக்கு சொத்தின் அடிப்படையில் மேற்படி இரண்டு கடன்களையும் வாங்கியதாக சொல்லியிருப்பது முற்றிலும் பொய் என்று சொன்னால் சரியல்ல நான் பயிர் ஈடு கடன் வாங்கினேன் அந்த கடனானது தற்போது விவசாய கடன் தள்ளுபடி செய்யும்போது தள்ளுபடி ஆனது.

05) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணத்தில் பி.கே.மணி மற்றும் பி.கே.பெருமாள் என்ற இருவர் பெயரிலும் கடன் வாங்கியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அது நகை கடனாகும். நான் காவல் நிலையத்தில் அளித்ததாக சொல்லும் புகாரின் தேதி தெரியுமா என்றால் நினைவில்லை சண்முகம் புகார் அளித்த அன்றே தான் புகார் அளித்தேன். நான் புகார் அளித்ததாக சொல்வதற்கு புகார் மனு ஏற்பு சான்றிதழ் வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்படவில்லை. நான் சொல்வதுபோல எந்த புகாரும் காவல் நிலையத்தில் அளிக்கவில்லை என்றாலும், வா.சா.ஆ.5 புகார் மனுவானது வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

06) 3, 4 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற கிரைய சொத்தை அனுபவிக்கவிடாமல் தடுப்பதற்காகவே பிரச்சனை செய்வதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும், எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றாலும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு உரிமை படைத்த சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.